


கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 78 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 12 – புதன்கிழமை 29 அக்டோபர் 2025 – கோவை ★ ★ 12 + 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 78 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 12 - Wednesday 29 October 2025 - Kovai ★ ★ 12+16 Pages ₹5.00


## நவ. 2 இல்

## சி.எம்.எஸ்.-03 ராக்கெட் விண்ணில் பாய்கிறது!

சென்னை, அக். 29 –

கடற்படை, ராணுவப் பயன்பாட்டுக்கான சிஎம்எஸ்03 செயற்கைக்கோள், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்3 ராக்கெட் மூலம் நவம்பர் 2ம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது. நாட்டில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இதுவரை 48 செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்தியுள்ளது.

அதில், கடந்த 2013ம் ஆண்டு செலுத்தப்பட்ட ஜிசாட்7 (ருக்மணி) செயற்கைக்கோளின் ஆயுள்காலம் விரைவில் முடிவடைய உள்ளது. அதற்கு மாற்றாக, சுமார் ரூ.1,600 கோடியில் அதிநவீன சிஎம்எஸ்03 (ஜிசாட்7ஆர்) செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து எல்விஎம்3 (ஜிஎஸ்எல்வி மார்க்3) ராக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் நவம்பர் 2ம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

இதற்காக, ராக்கெட் பாகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அதில் விண்கலம் பொருத்தப்பட்டுள்ளது. பின்னர், ஏவுதளத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தயார் நிலையில் உள்ளது. சிஎம்எஸ்03 செயற்கைக்கோள் 4,400 கிலோ எடை கொண்டது. இதுவரை புவி வட்ட சுற்றுப்பாதைக்கு ஏவப்பட்டதிலேயே இதுதான் அதிக எடை கொண்ட தகவல் தொடர்பு செயற்கைக்கோள்.

## பீகார் தேர்தல்:

## 2,616 வேட்பாளர்கள் போட்டி!

*பாட்னா, அக். 29 -*

*பீகார் சட்டப்பேரவை தேர்தலில் மொத்தம் 2616 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். அங்கு பிரசாரம் தீவிரம் அடைந்துள்ளது. 243உறுப்பினர்கள் கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடக்கிறது. நவ.6ஆம் தேதி 121 தொகுதிகளுக்கும், நவ.11 ஆம் தேதி 122 தொகுதிகளுக்கும் தேர்தல் நடக்கிறது. நவ.14ஆம் தேதி ஓட்டு எண்ணிக்கை நடக்கிறது.*

*பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான மனுத்தாக்கல் முடிந்து விட்டதால் அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் களம் இறங்கி உள்ளனர். பிரதமர் மோடி நேற்று முன்தினம் அங்கு பிரசாரம் மேற்கொண்டார். இந்தியா கூட்டணி கட்சியினரும் பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.*

## தனி மனித நலனைவிட – நாட்டின் நலன்தான் முக்கியம் என்ற உணர்வோடு

# தி.மு.க. - காங்கிரஸ் கொள்கை உறவு நாட்டைக் காக்கும்!

## விருதுநகர் காங்கிரஸ் முன்னாள் எம்.எல்.ஏ. சொக்கர் இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, அக். 29 -**

**“தனி மனிதர்களின் நலனைவிட நாட்டின் நலன்தான் முக்கியம் என்ற உணர்வோடு தி.மு.க. - காங்கிரஸ் கொள்கை உறவு நாட்டைக் காக்கும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுநகர் காங்கிரஸ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சொக்கர் இல்ல மணவிழாவை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சொக்கர் அவர்களின் பேரனும், விருது நகர் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ ராஜா சொக்கர் அவர்களின் மகனுமான சிவராஜா ஸ்ரீ ராஜா - எஸ். சாலுபாரதி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, ஆற்றிய உரை வருமாறு:-

மிகப்பெரிய அரசியல் பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீராஜா சொக்கர் - திருமதி பூர்ணிமா தம்பதியரின் அருமை மகன் சிவராஜா ஸ்ரீராஜா அவர்களுக்கும், தொழிலதிபர் சரவணன் - சுசிலா தம்பதியரின் அருமை மகள் சாலுபாரதி அவர்களுக்கும் நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு இந்த மணவிழா நிகழ்ச்சி நிறைவேறி இருக்கிறது. இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்று, மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சொக்கர் அவர்களின் பேரனும், விருதுநகர் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ ராஜா சொக்கர் அவர்களின் மகனுமான சிவராஜா ஸ்ரீ ராஜா – எஸ். சாலுபாரதி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள், மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

இந்த மணவிழா நிகழ்ச்சி ஒரு சீர்திருத்த திருமணமாக, சுயமரியாதை உணர்வோடு நடைபெறுகின்ற திருமணமாக நடந்தேறியிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும். இதுபோன்ற சீர்திருத்த திருமணங்கள், சுயமரியாதை திருமணங்கள் 1967க்கு முன்பு நடைபெற்றது என்று சொன்னால், அந்த திருமணங்கள் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தைப் பெறமுடியாத நிலையில் அந்த திருமணங்கள் நடந்தேறி இருக்கிறது.

**வணிகர்களுக்காக பாடுபட்டவர் சொக்கர்!**

ஆனால், 1967க்கு பிறகு தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்று, பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்று முதன்முதலாக சட்டமன்றத்தில் முதலமைச்சராக நுழைந்து சீர்திருத்த திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தை நமக்கு பெற்றுத் தந்திருக்கிறார். ஆகவே, இன்று நடைபெற்றிருக்கக்கூடிய இந்தத் திருமணம் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்ற நிலையில் நடந்தேறியிருக்கிறது.

### கொள்கை உறவாக வலுப்பெற்ற நட்பு!



**இன்றைக்கு காங்கிரஸ் கட்சியின் இளந்தலைவராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய அருமை சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் தனிப்பட்ட முறையில் என் மீது காட்டுகின்ற அன்பை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது. “மற்ற அரசியல் கட்சித் தலைவர்களை எல்லாம் பேசுகின்ற போது, விளிக்கின்ற போது யாரையும் நான் சகோதரர் என்று சொன்னது கிடையாது; ஆனால், ராகுல் காந்தியை பற்றி மட்டும் நான் விளிக்கின்றபோது அருமை சகோதரர் என்று நான் சொல்வதுண்டு.**

**காரணம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், அவர் என்னை அண்ணன், மூத்த அண்ணன் – எப்போது பார்த்தாலும், என்னிடம் ஃபோனில் பேசுகின்ற போதும் சரி – நேரடியாக பார்க்கும் போதும் மை டியர் பிரதர் என்று தான் சொல்வார். அதையெல்லாம் என்னால் மறக்க முடியாது.**

நம்முடைய ஸ்ரீராஜா சொக்கர் அவர்கள், விருதுநகர் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்து அவர் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவரின் தந்தையார் சொக்கர் அவர்கள், விருதுநகர், சிவகாசி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் முக்கிய உறுப்பினராக இருந்து, வணிகர்களுடைய முன்னேற்றத்திற்கு, வணிகர்களுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் அவர் பாடுபட்டிருக்கிறார்; பணியாற்றியிருக்கிறார் என்பது எல்லோருக்கும் நன்றாக தெரியும்.

1989ஆம் ஆண்டில் இருந்து நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் தலைவர்களோடு நெருங்கிப் பழகி அவரிடம் பாசத்தோடு, அன்போடு, பண்போடு இருந்து பழகியவர் நம்முடைய சொக்கர் அவர்கள். சட்டமன்றத்தில் அவர் இருந்தபோது, நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றி இருக்கிறேன். அவர் சட்டமன்றத்தில் பேசக்கூடிய பேச்சுக்கள் எல்லாம் நான் ரசித்ததுண்டு. வியந்து எண்ணியதுண்டு.


தொடர்ச்சி 3–ஆம் பக்கம்


## SIR என்ற பெயரில் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதித் திட்டத்திற்கு எதிராகப் போராட — தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - நவம்பர் 2 - அனைத்துக் கட்சிக் கூட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டறிக்கை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (27.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஒன்றிய அரசின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து தோழமைக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

**சென்னை, அக்.29-**

**SIR என்ற பெயரில் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதித் திட்டத்திற்கு எதிராக போராட தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

**வருகிற நவம்பர் - 2 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில் பங்கேற்றிட ‘மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி’த் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.**

**அதன் விவரம் வருமாறு :-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (27.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஒன்றிய அரசின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision) குறித்து தோழமைக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எஸ். ரகுபதி, தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, என்.ஆர். இளங்கோ, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் தங்கபாலு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவிக்குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசிய செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நவாஸ் கனி, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான த.வேல்முருகன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைமை நிலையச் செயலாளர் ஜெயினுலாபுதீன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் பொதுச் செயலாளர் அபூபக்கர், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் தலைமை


தொடர்ச்சி 4–ஆம் பக்கம்